RT- 227135280 IN
2/11/2020

பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

ஒடுகத்தூர்.

| அனுப்புதல் | பெறுதல் 02-11-2020. |
| --- | --- |
| த.சம்பத் ஓய்வு ஆசிரியர் | உயர்திரு.மேல்முறைஈட்டு அலுவலர் மற்றும் |
| 43 /34 சி,மேல்தெரு / தஞ்சான் இல்லம் | முதன்மைக்கல்வி அலுவலர் அர்கள் |
| ஒடுகத்தூர்—632103 (வே.மாவட்டம் ) | சத்துவாச்சாரி -வேலூர் -632009 |

3918

அய்யன்மீர், வணக்கம்,

03 NOV 2020

பொருள் ;- தகவல் அறியும் உரிமைசட்டம் 2005 –பிரிவு 6(3)ன்படி மாற்றப்பட்ட விண்ணப்பம் – அரசு ஆணைகள் 69,180,181 /2013 ன்படி ஊதிய திருத்தமும்பணப்பலனும் பெற்று- அரசு /அரசு உதவிபெறும் உயர்நிலை –மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இடைநிலை /சிறப்பு ஆசிரியர்கள் இதேநிலையில் பலன்பெற்ற பதவிஉயர்— பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் விபரங்களை பணிந்து வேண்டுதல் சார்பாக

பார்வை ;-01.எனது விண்ணப்பம் 12-03-2020 நாளிட்டது பிரிவு 6(3)ன்படி மாற்றம்செய்யப்பட்டது

02. பிரிவு 19(1)ன்படி 01-10-2020 நாளிட்ட எனது மேல்முறையீட்டு விண்ணப்பம்

03. தங்களது அலுவலக ஓ.மு.எண்.2300/அ3/2020 நாள். 27-10-2020 (எனக்கு சேர்ந்தது---(31-10-2020 )

****************

பார்வை 03ன்படி தங்களால் அனுப்பப்பட்ட தகவல்கள் எனது விண்ணப்பம் பார்வை 01 மற்றும் 02 க்கு சற்றும் பொருந்தாதது என்பதைபணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் அரசு ஆணைகள் 69,180, &181 / 2013 படி நீதிமன்றதீர்ப்பு பெற்று தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஊதிய நிலையில் ஊதியதிருத்தம் பெற்றவர்கள் பணப்பலன் பெற்றவர்கள் விபரம் தெளிவாக கேட்டுள்ளேன் அதற்குரிய தகவல்கள் தரப்படவில்லை மாறாக நான் கேட்காத அரசு ஆணை 90 /2018 க்குரிய பதில் தரப்பட்டுள்ளது வருத்தமானதாகும்

பார்வை 01ன்படியான 12-03-2020 நாளிட்ட எனது விண்ணப்பம் பத்தி 02 மற்றும் பத்தி 05ல் நான் தகவலாக கேட்டுள்ளது அரசு ஆணை 69,180 &181 /2013 ன்படி ஊதியதிருத்தமும் பணப்பலனும் பெற்று01-06-1988 க்கு முன் தேர்வு /சிறப்புநிலையும் 31-12-1995க்குபின் சிறப்புநிலையும் பெற்ற இடைநிலை /சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் அதேநிலையில் பணியாற்றி பதவி உயர்வு பெற்றவர்கள் விபரம் மட்டுமே தகவலாக கேட்டுள்ளேன்.( அரசு ஆணை 90 /2018 ன்படி பலன் பெற்றவர்கள் குறித்து நான் கேட்கவில்லை என பணிந்து தெரிவித்து சரியான தகவல் வழங்கிட மீளவும் வேண்டுகிறேன்.

பிரிவு 19 (3)ன்படி இரண்டாவது மேல்முறையீடு செய்வதை தவிர்க்கும் நிலையில் மீளவும் தங்களுக்கு பணிவோடு விண்ணப்பிக்கிறேன் அருள்கூர்ந்து அரசாணை 69 /2013 ,180/2013 ,181 / 2013 ன்படி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஊதிய நிலை தேர்வு நிலை 1640-60-2900 சிறப்புநிலை 2000-75-3200 பலன் பெற்றவர்களின் விபரம் பின் இணைப்பில் உள்ளவாறுபட்டியல் வழங்கிட பணிந்து வேண்டுகிறேன்.

இப்படிக்கு

/ தா.பி.பா / 02/11/2020

அரசு ஆணைகள் 69/2013 -180/2013 -181/2013 ன்படி ஊதிய திருத்தமும் பணப்பலனும் பெற்றவர்கள் விபரம் பணிந்து உரிய செயல்முறைகள் எடுத்துக்காட்டிற்காகஅளித்தல்

---

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் ஆணை . ந.க.எண்.1783 / அ5 /2010 நாள்.10-10-2014ன்படி ஊதிய திருத்தம் /பணப்பலன் வழங்கிய விபரம் உரிய நகலுடன் பணிந்தளித்தல்

| பெயர் & பள்ளி பெயர் | நீதிமன்ற எண்.W.P | தேர்வுநிலை பெற்றநாள். | சிறப்புநிலை பெற்றநாள். | பதவிஉயர்வு பெற்றநாள் | அ.ஆ.69,180,181 ஊதிய திருத்தம் பணப்பலன் /ஊதி நிலை/தேர் /சிறப | பணி ஓய் |
|---|---|---|---|---|---|---|
| எ.செல்லம்மாள் பட்டதாரி.ஆசி அ.உ.பள்ளி பெரியாங்குப்பம் | 11832/13 | 24-08-1987 | 14-09-1997 | 1998 | 01-06-1988 முதல் தேர்வு நிலையில் 1640-60-2900 | 2006 |

திருவள்ளூர் மாவட்டமுதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் ஆணை ந.க.எண்.10069 /ஆ5/2013 நாள்.6-11-2013

அரசு ஆணைகள் 69,180,181 /2013 ன்படி ஊதிய திருத்தம் மற்றும் பணப்பலன் பெற்றவர் விபரம் பார்வைக்காக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திரு ப்பி.சுப்பிரமணியன் உ.க.ஆசிரியர் /ஓய்வு அ.ஆ.மே.நி.பள்ளி திருத்தணி | WP.20033/2012 | 22-08-1976 | 22-08-1986 | ——— | சிறப்புநிலை ஊதியதிருத்தம் 01-06-1988முதல் 2000-75-3200 | 1998 |

இப்படிக்கு.
02/11/2020

இணைப்பு ;- பார்வை 02 விண்ணப்ப நகல்

நகல் பணிந்தளித்தல்

---

உயர்திரு.தலைமை தகவல் ஆணையர் அவர்கள் ,

தகவல் ஆணையம் –சென்னை -18